# வவுனியா வடக்கு பிரதேச சபை

## 2024.05.01 முதல் 2024.12.31 வரை மரக்கறி சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2024

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி : 2024.04.22 தொடக்கம் 2024.04.30 ஆம் திகதி பி.ப 12.45 வரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 2024.04.30 பிற்பகல் 12.55 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2024.04.30 பிற்பகல் 01.00 மணி

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ. இல | சந்தை | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | கனகராயன்குளம் மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 10,000.00 | 400,000.00 |
| 2 | நெடுங்கேணி மாட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 10,000.00 | 10,00,000.00 |
| 3 | நெடுங்கேணி ஆட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 5,000.00 | 130,000.00 |
| 4 | கனகராயன்குளம் ஆட்டிறைச்சிக் கடை | 2,000.00 | 5,000.00 | 130,000.00 |
| 5 | நயினாமடு மரக்கறி சந்தை | 2,000.00 | 5,000.00 | 30,000.00 |

**கேள்வி நிபந்தனைகள்:**

1. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி, இரண்டாம் பிரதி என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுவதோடு **எதற்கான கேள்வி விண்ணப்பம்** என்பதனையும் குறிப்பிட்டு **“செயலாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி”** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரத்திற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்படுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
2. கேள்விதாரர் இலங்கைப்பிரஜையாக இருக்கவேண்டும் என்பதுடன் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் **“தவறுனராகக்”** கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. *எனினும் படிவம் வழங்கப்பட்டபின் தெரியவரும் பட்சத்தில் அவரின் கேள்வி **நிராகரிக்கப்படும்.***
4. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் விண்ணப்பங்களுடன் **தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் பிரதேச செயலரால் விநியோகிக்கப்பட்ட குடும்ப அட்டை மற்றும் அதன் பிரதி** என்பனவற்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். மூலப்பிரதிகள் மீள ஒப்படைக்கப்படும்.
5. தெரிவு செய்யப்படும் கடைகள், சந்தைகளுக்கான சித்தி தரக்கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பங்கு தொகையை எம்மால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னதாக வைப்புத் தொகையாக செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மிகுதி 2/3 தொகையினை **2024.08.31** இற்கு முன்னர் மாதாந்தம் சம தொகைகளாக ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறுமிடத்து 10% தண்டப்பணம் அறவிடப்படும்.
6. தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு மேல் மாதாந்த குத்தகைத் தொகையினை செலுத்த தவறின் எதுவித அறிவித்தலும் இன்றி குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படுவதுடன் வைப்புத் தொகை மீளளிக்கப்படமாட்டாது.
7. கேள்வி விண்ணப்பம் சமர்ப்பித்து சித்தி பெற்ற கேள்விதாரர் குறிக்கப்பட்ட கால அவகாசத்தினுள் ஒப்பந்தம் மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் அவரது கேள்வி விண்ணப்பம் இரத்துச்செய்யப்படும்.

அத்துடன் எதிர்காலத்தில் அவர் கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பிக்கமுடியாதவாறு கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்படுவார் என்பதோடு கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

8. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை எந்தவொரு காரணமும் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
9. கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புபணமும் மீளளிக்கப்படமாட்டாது.
10. கேள்வி அறிவித்தலுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாகவே கேள்விகளை அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரத்தில் கொடுக்கப்படும் விபரங்கள் உண்மையாகவும் சரியானவையாகவும் இருப்பதுடன் இவைகளை அத்தாட்சிப்படுத்தும் பொறுப்பும் கேள்விதாரரைச் சார்ந்தது ஆகும். கேள்விப்படிவங்களை தருவதற்கு முன்பும் அதற்கு பின்பும் நிபந்தனைக்குரிய அத்தாட்சியினை சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருப்பது அவசியமாகும்.
11. மரக்கறிச்சந்தை மண்டபத்தினை குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர், கொண்டுவரும் பொருட்களின் விற்பனைவிலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக்கூடாது அத்துடன் உற்பத்தியாளரிடமிருந்து 10% கழிவு பெறும் நடைமுறை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.
12. சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற இறைச்சி, மீன் மற்றும் மரக்கறி போன்றன சுகாதாரமானதாக இருப்பதுடன் நியாயமான விலைக்கு பொதுமக்களுக்கு விற்பனை செய்வதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
13. குத்தகை தாரர் கடை, சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு தாங்கள் முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
14. சந்தைகளை குத்தகைக்கு பெறுபவர் வியாபாரிகள் கோருமிடத்து சந்தைப்பகுதியில் இடம் இருப்பின் நியாயமான வாடகைக்கு வழங்குதல் வேண்டும்
15. சந்தைச்சுற்றாடலில் இருந்து 0.5 Km (ஐநூறு மீற்றர்) சுற்றுவட்டாரத்தில் மரக்கறி, மீன், இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
16. உபகுத்தகைக்கு விடுவது தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் குத்தகைக்கு எடுத்தவரே அலுவலக தொடர்பாடல்களை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு தெரியவரின் குத்தகை ஒப்பந்தம் இரத்துச்செய்யப்படும்.
17. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒப்பந்த சரத்துகளுக்கு அமைவாகவும் என்னால் காலத்திற்கு காலம் எழுத்துமூலம் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ஒழுகுதல் வேண்டும்.
18. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
19. கேள்வி விண்ணப்பங்களை உரிய நேரத்திற்கு முன்னதாக சமர்ப்பிக்கத் தவறின் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
20. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டே கேள்வி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
21. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது 024-2030200 எனும் தொலைபேசி இலக்கத்தினை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்

திருமதி சோதிநாயகி மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி.